அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 27/2017

எனது இல: EST-4/02/ REM/0101 (01 ஆம் தொகுதி)
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.10.13

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர்களை மீளச் சேவையில் ஈடுபடுத்தல்**

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2007.05.11 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 09/2007 தொடர்பாக தங்களது அவதானம் கோரப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களுக்கு சம்பளம் வழங்கும் போது கீழே குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது பற்றி அறியத் தருகின்றேன்.

I. 2016.01.01 ஆந் திகதிக்குப் பின்னர் ஒப்பந்த கால எல்லையை பூர்த்தி செய்து, மீள ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற அலுவலர்களுக்கும், 2016.01.01 ஆந் திகதிக்குப் பின்னர் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 09/2007 இன் ஏற்பாடுகளின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற அலுவலர்களுக்கும் அச் சுற்றிக்கையின் கீழ் ஏற்புடைய கொடுப்பனவை கணக்கிடும் போது, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத்தினதும் சீராக்கப் படியினதும் அரைவாசியை ஏற்புடையதாக கொள்ளல் வேண்டும்.

03. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/.ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு